**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 06 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கற்பிட்டி பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதியைக் பெறுமதியைக் கணக்கெடுப்பு செய்வதற்குப் பதிலாக கூட்டத்தின் கட்டுமான செலவை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டிருந்தது. | காணி மற்றும் கட்டிங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான காணி மற்றும் கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு விடய பொறுப்பதிகாரிக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டிற்கான கிடைக்கப்பெற வேண்டிய சம்பள மீள்நிரப்பல் ரூபா 105,300 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கவனயீனத்தால் இது ஏற்பட்டுள்ளதோடு 2019 ஆம் ஆண்டில் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டிற்கான கல்பிட்டி பேரூந்து தரிப்பிடம் மற்றும் வாரச் சந்தை என்பவற்றில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப்பலகை பெறுமதியான இரண்டு பெயர்ப்பலகைகள், ரூபா 131,100 மற்றும் ரூபா 63,300 இற்கான ஏணி ரூபா 19,600 பெறுமதியான 05 UPS என்பன சொத்துக்களாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களாக கணக்கெடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் திருத்தி கணக்கெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். |

**(ஆ) பொருந்தாக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நான்கு கணக்கீட்டு விடயங்களின் அட்டவகைகள் / பயன்படுத்தப்பட்ட புதுதகங்களின் படி மீதிக்கும் நிதிக்கூற்றின் மீதிக்கும் இடையிலான பொருந்தாமையின் கூட்டுத்தொகை ரூபா 255,123 ஆகும். | நிதிக்கூற்று மற்றும் அட்டவணைகளில் உள்ள வேறுபாடுகளைச் சமன்படுத்தி கணக்கைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வரவு ஏட்டில் பல வருடங்களாகக் காணப்படும் ரூபா 232,478 வித்தியாசம் மற்றும், ஏக்கர் வரி மற்றும் மாமிசக் கடை வாடகை ஏடுகளில் காணப்படும் வேறுபாடுகளைத் திருத்தம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(I) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெறவேண்டிய 09 கணக்குகளின் மொத்த மீதி ரூபா 75,695,913 அதனோடு அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மொத்த மீதி ரூபா 10,694,549 ஆகும். | அறவிட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதோடு முற்பணத்தை விரைவில் கணக்குத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். |

### (II) செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய 08 கணக்குகளின் மொத்தம் ரூபா 28,448,075 ஆக இருந்த போதும், அதில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளின் ரூபா 7,517,990 ஆகும். | செலுத்த வேண்டிய செலவினங்களை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்ரைக எடுத்தல் வேண்டும். | ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய செலவினத்தை செலுத்தவும், காலங் கடந்த வைப்புக்களை வருமானமாகக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

### (ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல அத்தாட்சிகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மொத்த பெறுமதி ரூபா 259,705,106 ஆன 08 கணக்கு விடயங்களுக்குரிய அத்தாட்சிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான எழுத்து மூல அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | குறித்த ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் இற்றைப்படுத்தப்படாத காரணத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. எதிர்காலத்தில் அவற்றைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| | 136 ஆம் பிரிவு | சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள சபைக்கு சொந்தமான குத்தகைக்கு | சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை | இதுவரையில் மதிப்பீட்டு திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழங்கப்படும் அல்லது வாடகைக்கு வழங்கப்படும் சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரி வருமானங்களை சிட்டைப்படுத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்படும். | குத்தகைப் பணம் குத்தகை தாரரிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| | 158 ஆம் பிரிவு | மதிப்பீட்டு வரி மற்றும் ஏக்கர் வரி நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக அந்த வரியை செலுத்த வேண்டியவர்களின் அசையும், அசையாச் சொத்துக்களைத் தடை செய்து நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரையிலும் 10,000 அற்கு அதிக மதிப்பீட்டு வரியை புறக்கணிப்பவர்களின் அசையும் சொத்துக்களை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்<br>----------------------------- | | | |
| | விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்க வில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்போது கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| | விதி இலக்கம் 59 | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தினுள் விற்பனை வியாபாரம் மற்றுமு் தொழில் தொடர்பான ஆய்வொன்றை நடாத் ிப ட்டியலொன்று | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 இல் ஆய்வு நடாத்தி குறித்த விதிகளின் பிரகாரம் பட்டியலைச் சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| விதி இலக்கம் 65 | கொடுப்பனவைப் புறக்கணிக்கும் நபர்களின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| விதி இலக்கம் 218 | சபையின் சகல காணிகளையும் கட்டிடங்களையும் வருடத்திற்கொரு முறை பரீட்சிப்பதற்குக் குழவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் சரியான சொத்துக்கள் ஆவணங்களைச் சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,068,615 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 20,987,905 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,225 | 3,204 | 1,739 | 10,521 | 1,664 | 2,363 | 7,099 | 10,049 |
| (ii) | வாடகை | 10,968 | 10,056 | 8,643 | 7,179 | 12,139 | 9,721 | 8,349 | 6,885 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,136 | 2,607 | 2,607 | 60 | 3,800 | 2,665 | 2,665 | 63 |
| (iv) | ஏனைய வருமானம் | 96,116 | 91,566 | 48,143 | 43,424 | 83,626 | 67,771 | 12,760 | 27,504 |
| | மொத்தம் | 113,445 | 107,433 | 61,132 | 61,184 | 101,229 | 82,520 | 30,873 | 44,501 |

சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் மீளாய்வாண்டிற்குரியதாகபட்டியலிடப்பட்ட வருமானத்தில் மேற்கொண்ட சேகரிப்புக்கள் மற்றும் கடந்த வருடங்களின் நிலுவை வருமானங்களில் மேற்கொள்ளப்பட்ட சேகரிப்புக்களும் உள்ளடங்கியுள்ளது.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மொத்த வருமான சேகரிப்பு செயலாற்றல் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது அதிகரித்துக் காணப்பட்டாலும் வீத வரி, ஏக்கர் வரி மற்றும் நீர் வரி வருமான சேகரிப்பு பலவீனமாக உள்ளது. | அறவிட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீத வரி சலுகையை அறவிடுவதற்கும், ஆய்வின் பிரகாரம் ஏக்கர் வரி அறவிடவும் நீர்க்குழாய்கள் புதுப்பித்தலின் பின் நீர் வரியை அறவிடவும் அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வுக்கான ஆண்டின் இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 9,122,757 ஆக உள்ளதோடு அந்த நிலுவையில் 01 வருடத்திற்கும் கூடிய 05 வருடத்திற்குட்பட்ட நிலுவை ரூபா 2,642,930 ஆகவும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 5,180,223 ஆகவும் உள்ளது. | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1990 இன் பின்பு மீளவும் வீதவரி திருத்தம் 2010 ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ளதோடு வீதவரிப் பெறுமதி அதிகரித்துள்ளமையால் செலுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பெறுமதியை பகுதிகளாக அறவிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டுள்ளது. |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ஏக்கர் வரி நிலுவை வரி நிலுவை ரூபா 829,162 ஆக உள்ளபோது அந்த நிலுவையில் ரூபா 506,555 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் ரூபா 297,565 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்திலிருந்தும் அறவிட வேண்டியதாகும். | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை அறவிட்டு ஆவணங்களை இற்றைப்படுத்திக் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரையில் இந்த ஏக்கர் வரி ஆய்விற்கு குழவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நிலுவைத் தொகையை அறவிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆவணங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் கடை வாடகை மற்றும் குத்தகையின் மொத்த நிலுவை ரூபா 7,178,620 ஆன போதும், அந்த நிலுவையில் ரூபா 4,712,873 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும் ரூபா 787,243 01 வருடத்திற்கும் 05 வருடத்திற்கும் இடைப்பட்ட காலத்திலிருந்தும் அறவிடப்பட வேண்டியவையாகும். | அறவிடப்பட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடை வாடகை மதிப்பீட்டு வேலை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப புதிய ஒப்பந்தங்கள் பெறப்பட்டு நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

### 2.2.6 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 இலிருந்து 2010 ஆம் ஆண்டு வரையிலும் 83 வியாபார நிலையங்களில் ரூபா 60,415 வியாபார அனுமதிப் பத்திர நிலுவை காணப்படுகின்றது. | அறவிட வேண்டிய வருமானங்களை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்தத் தொகையில் ரூபா 9,500 அறவிடப்பட்டுள்ளதோடு நிலுவைத் தொகை கடற்றொழில் புலம்பெயர்ந்தவர்களால் அவர்களிடமிருந்து அறவிட |

| | | | |
|---|---|---|---|
| | | | முடியாமையால் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் நீக்குவதற்கு கோரப்பட்டுள்ளது. |

### 2.2.7 வேறு வருமானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் வாடகை முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்தைப் பதிவு செய்து கட்டணம் அறவிடும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்களின் கட்டணம் அறவிடும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த ப்பட வேண்டும். | தந்போது 12 முச்சக்கர வண்டி சங்கங்களின் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு எதிர்காலத்தில் ஏனைய சங்கங்களையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஆ) | பிரதேச சபையின் நீர்வழங்கல் திட்டத்தின் கீழ் அண்ணளவாக 200 வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களுக்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டிருந்ததோடு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 381,166 நீர்க் கட்டணம் நிலுவையாக இருந்தது. சபையினால் நீர்க்கட்டணம் அறவிடும் போது பாவிக்கப்பட்ட கூறுகளைக் கணக்கிற் கொள்ளாது வீடுகளிலிருந்து மாதாந்தம் ரூபா 30 உம் வியாபார நிலையத்திலிருந்து மாதாந்தம் ரூபா 75 உம் சிட்டையிடப்பட்டிருந்ததோடு நிலுவை அட்டவணையின்படி ரூபா 240 இலிருந்து ரூபா 12,037 வரையான நிலுவைத் தொகை காணப்பட்டது. மேலும், 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நீர்க் கட்டணம் செலுத்தாத நிலையங்களும் உள்ளன. | குறித்த வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பாவிக்கப்பட்ட நீர் அலகுகளின் படி கட்டணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 40 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமையான நீர்த் திட்டமாகும். இந்த நிலுவைத் தொகையை அறிவிடுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற்றுக் கொள்ள வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 41,693,654 உம் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,497,275 உம் ஆகும். | அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) இடைக்கால சட்டவாக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட சட்டவாக்கங்கள் 42 இற்கு மேலதிகமாக சபையினால் 12 புதிய இடைக்கால சட்டவாக்கங்கள் இயற்றப்பட்டிருந்ததோடு உத்தேசிக்கப்பட்ட இடைக்கால சட்டவாக்கம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | குறித்த இடைக்கால சட்டவாக்கம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடன்படுகின்றேன். |

## (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 சனவரி 17 மற்றும் பீசீ/ஆல்சீ/01/04/2014/01 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 04(அ) முதல் (ஊ) வருமான பந்திகளின் பிரகாரம் நீண்டகால தொலைநோக்குடன் பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் இலக்கை அடையக்கூடிய திட்டங்கள் அடங்கிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததோடு 2018 ஆம் ஆண்டுக்கான தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த அபிவிருத்தித் திட்டத்தில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பீசி/ஆர்சி/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு உடன்படும் வகையில் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கின்றேன் |

## (இ) நிதிஏற்பாடு செய்யாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட ரூபா 5,940,000 பெறுமதியான 61 கைத்தொழில்கள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3,700,000 ஆன 39 கைத்தொழில்கள் மட்டுமே வேலை நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் கடனுரிமை செய்யப்பட்ட14 கைத்தொழில்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த கைத்தொழில் விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஏப்ரல் மாதம் பொதுக் குழு நியமிக்கப்பட்ட பின்னர் கௌரவ அமைச்சர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன்றி 2018 வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கு குறிப்பிட்டவை நிறைவேற்ற முடியாதுள்ளது. அவ்வாறே கௌரவ அமைச்சர்கள் சமர்ப்பித்த அபிவிருத்தி யோசனைகள் 61 இல் 06 யோசனைகள் மட்டுமே நிறைவேற்றப்படாததோடு 55 கைத்தொழில்களின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. |

## (ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 223 சதுர கிலோ மீற்றர் பரப்பை உள்ளடக்கிய பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உற்பத்தியாகும் குப்பைகளில் கொம்போஸ்ட் செயற்பணத்தில் பயன்படுத்துவது கல்பிட்டி நகரில் நாளொன்றுக்கு சேகரிக்கப்படும் டிரக்டர் லோட் 04 இல் 01 லோட் குப்பை மட்டுமேயாகும். ஏனைய பிரதேசங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் அந்தந்த பிரதேசங்களில் திறந்தவெளிகளில் கொட்டப்படுகின்றது. கொம்போஸ் செயற்தளத்திற்கு கட்டிடம் அமைப்பதற்கு 2012 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உதவித்திட்டத்தின் கீழ் ரூபா 6,307,057 மற்றும் புறநெகும திட்டத்தின் கீழ் ரூபா 784,300 இற்கான பேல் இயந்திரம் நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளதோடு சபை நிதியத்தில் இயந்திரத்திற்காக ரூபா 284,000 செலவிடப்பட்டிருந்தது. கொம்போஸ்ட் செயற்தளத்திற்கு மூன்று அவத்தை மின்சாரம் பெற்றுக் கொள்ளாததால் இயந்திரம் செயற்படுத்தாது உள்ளது. 2018 ஆம் ஆண்டினுள் கொம்போஸ்ட் உர விற்பனையில் ரூபா 34,465 உம் கிடைத்துள்ளது. திண்மக்கழிவு மத்திய நிலையம் இயங்கிய காணி 2018 மே 10 ஆந் திகதி வரையிலும் சபைக்கு உரிமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திண்மக் கழிவுகள் தொடர்பில் துணைச்சட்டங்கள் சட்டமாக்கப்பட்டிருப்பினும் கழிவு முகாமைத்துவ கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விதி மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையொன்றை | குறித்த இயந்திரத்தை இயக்க தேவையான மின்சாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்த குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திண்மக்கழிவு மத்திய நிலையத்தில் ‘‘கட்டர்’’ இயந்திரம் உள்ள போதும், அந்த இயந்திரத்தை இயக்க மூன்று அவத்தை மின்சாரம் அவசியமாதலில் இதுவரை இயக்கும் மூன்று அவத்தை மின்சாரத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கப் பட்டுள்ளது.<br><br>மீளாய்வாண்டில் பேல் இயந்திரம் கிடைத்துள்ள போதும் அந்த இயந்திரம் பெறப்பட்ட நாள் முதல் செயற்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றேன். காணி சீர்திருத்த ஆணைக்குழு மூலம் அக்காணியை சபைக்குப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளதோடு, 05 ஏக்கர் காணித் துண்டொன்றை வழங்குவதற்கான கடிதம் இதுவரையிலும் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.<br><br>சபையின் துப்பரவுத் தொழிலாளர் மற்றும் திண்மக்கழிவு மத்திய நிலைய தொழிலாளர்கள் வருடாந்தம் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பப்படுவதோடு, கடந்த வருடத்திலும், தொழிலாளர்கள் கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் |

| | | |
|---|---|---|
| உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் சுகாதார ஊழியர்ளின் மற்றும் காப்புறுதிக்காக சேவை நிதி ஒதுக்கீடு செய்திருந்த போதும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை. | | வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறே திண்மக்கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தின் சகல தொழிலாளர்களும் அதிகாரிகளும் உள்ளிட்டோர் நாத்தாண்டி பிரதேச சபையிலும் இடம்பெற்ற திண்மக்கழிவு பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்டனர் |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் “நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டில் சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | 2019 வரவு செலவு மற்றும் திட்டங்கள் தயாரிக்கையில் அபிவிருத்தியின் குறிக்கோள்கள் நிறைவேறும் வகையான செயல்களை உட்சேர்த்து அவற்றுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் நீர் செயற்திட்டத்தின் வருடாந்த சிட்டையிடல் ரூபா 36,670 ஆன போதம் நிலையத்தின் மின்கட்டணம் வருடத்திற்கு ரூபா 100,000 இற்கும் அதிகமாக செலுத்தப்பட்டிருந்ததோடு, | குறித்த செலவினத்தை குறைத்துக் கொண்டு வருமானத்தைச் சேகரிக்க சபை நடவடிக்கை | நீரை விநியோகிக்கும் நீர் குழாய்த் தொகுதியை புனரமைக்க பொதுக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | வருடத்தின் அறவீடுகள் ரூபா 16,960 ஆக உள்ளதால் நீர்க்கட்டண வருமானம் மின் கட்டணத்தைச் செலுத்துவதற்குக் கூட போதுமானதாக இல்லை. | எடுத்தல் வேண்டும். | வரவு செலவின மூலம் நில ஒதுக்கீடு செய்து கொள்வதற்கும், அதற்கிடையில் நீர் வழங்கலுக்கு நீர் மீற்றர் பொருத்தி சரியான அளவில் கட்டணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படாததோடு முந்தைய ஆண்டில் தொலைந்த 180 புத்தகங்கள் மற்றும் மீளாய்வாண்டில் தொலைந்த 1,158 புத்தகங்கள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | தொலைந்து போனமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆய்வு அறிக்கையின் பரிந்துரைகளுக்கமைய 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தொலைந்த சகல புத்தகங்கள் தொடர்பில் காரணங்களை அறியவும் அதற்குரிய குறித்த புத்தகங்களின் பெறுமதியையும் 25மூ அரச கட்டணத்தையும் அந்த சேவகன் சேவகியிடமிருந்து அறவிட அபிவிருத்தி அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (இ) | 2010 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின் கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் அணுகூலங்களுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட வீடுகள் மற்றம் வியாபார நிலையங்களுக்கு தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி சிட்டையிடப்பட்டிருக்க வில்லை. மேலும், சபையினால் வீதவரி அறவிடப்பட்டது. கல்பிட்டி நகர எல்லைக்குள் மட்டுமேயான போதும் ஏனைய நகரங்களான நுரைச் சோலை, கந்தக்குளி, மதுரங்குளி மற்றும் பால்குடா போன்ற இடங்களில் மற்றும் புத்தகளம் - பாலாவி பிரதான வீதி மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கட்டிடங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கேற்ப 2013 ஆம் ஆண்டில் கடைத்தொகுதி மதிப்பீடு செய்யப்பட்ட போதும், கடை குத்தகைதாரர் 19 பேருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | குத்தகைதாரருடன் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (உ) | கைத்தொழிலின் கீழ் எடுக்கப்படும் வியாபாரங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்னர் சுற்றாமல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளதா என்பதை அறியும் வேலைத்திட்டம் இருக்கவில்லை. இதனால் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள கைத்தொழில்கள் வியாபாரம் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பை தவிர்க்கும் முறைகள் பற்றி சபை கவனத்தில் கொள்ளவில்லை. மேலும், சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் காணப்படும் கைத்தொழில்கள் மற்றும் வியாபாரம் தொடர்பான ஆவணம் பேணப்படவில்லை. | குறித்த சட்டதிட்டங்களுக் கேற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உண்மையான பதவியணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் செயலாளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதோடு இடைநிலைத் தரத்தில் 05 பதவிகள் வெற்றிடதாக உள்ளன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் செயலாளர் பதவி பல வருடங்களாக வெற்றிடமாக உள்ளதுடன், இதுவரை அதற்கான பொருத்தமான உயர் நிலை அதிகாரியொருவர் நியமிக்கப்படவில்லை. அவ்வாறே இடைநிலை பதவி வெற்றிடங்கள் 06 ஐ நிரப்புவதற்கு உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக உள்ளூராட்சி அரச சேவைகள் ஆணைக்குழுவிடம் கோரப்பட்டுள்ளது. |

### (ஆ) அறவிடப்பட வேண்டியுள்ள ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மொத்த நிலுவை ரூபா 5,802,471 ஆக உள்ளதுடன், அதில் ஓய்வு பெற்ற, சேவையை விட்டு விலகிய, மற்றும் மரணமடைந்த, ஊழியர்கள் 48 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 124,843 04 வருடங்களுக்கு அதிக காலமாக நிலுவையாக உள்ளது. | கடன் நிலுவைமை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிலர் ஊழியர் கடனை பகுதி பதியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தந்துள்ளதோடு ஏனையோர், தற்போது இப்பிரசேதத்தை விட்டு வேறு பிரதேசங்களுக்க சென்றுள்ளதால் அவர்களுக்கு இதுவரை தெரியப்படுத்த முடியவில்லை. அது போது மரணமடைந்தோருக்கு வழங்கப்பட்ட கடன் தொகையை அறவிட அவர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொடர்பான எதுவித அறிக்கையும் இல்லாமையால் அறவிடுவதற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. |

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளூராட்சிச் சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பாக ரூபா 1,984,541 செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபை அத்தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. | ஓய்வூதிய நிதியத்திற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு 1993 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வூதியம் பெற்ற உத்தியோகத்தர்களுக்காக சபையினால் செலுத்த வேண்டிய தவணைக் கட்டணம் தொடர்பில் பொதுக்குழுவிடம் சமர்ப்பிக்க அதற்குரிய விரிவான தகவல்களை சமர்ப்பிக்க தகவல்கள் சபையின் சுவடிக்கூடத்தில் இல்லை. |
| (ஆ) | உள்ளூராட்சி சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின மூலம் கல்பிட்டி பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த | குறித்த சொத்துக்கள் பாதுகாப்பது மற்றும் காணாமல் | கொடிக் கம்பங்களை கையளிப்பதாக அனைவருக்கும் எழுத்த மூலம் அறிவத்திருப்பினும் |

| | | |
|---|---|---|
| 464 கொடிக் கம்பங்களில் ரூபா 147,344 பெறுமதியான 115 கொடிக் கம்பங்கள் கடந்த வருடங்களில் வெளியாட்களுக்கு வழங்கப்பட்டிருந்ததோடு அந்த கொடிக் கம்பங்களையோ அதன பெறுமதியையோ மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டில் 31 கொடிக் கம்பங்களும் , 2018 ஆம் ஆண்டில் 62 கொடிக் கம்பங்களும் காாணமல் போயிருந்தன. அது தொடர்பில் எதுவித நடவடிக்கையம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போனமை தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதுவரை அக்கொடிக் கம்பங்களை மீளப்பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் வகைப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான காரியலயத்தினூடாக ஏனைய உப அலுவலகங்கள், முன்பள்ளி, நூலகங்கள் மற்றும் திண்மக்கழிவு மத்திய நிலையம் என்பவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த பொருட்கள் அந்தக் காரியாலயத்தினால்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதோடு அது தொடர்பில் தொகை பொருட் பட்டியல் ஆவணங்களில் குறிப்பெழுதப்பட்டிருக்வில்லை. | குறித்த ஆவணங்கள், பொருட் பட்டியல் இற்றைப்படுத்தப் பட்டு பேணப்பட வேண்டும். | சபையின் உப அலுவலகம், முன்பள்ளி நூலகம் மற்றும் ஏனைய சபைக்கு சொந்தமான இடங்களுக்கு கடந்த ஆண்டில் கையிருப்பு ஆவணத்தில் குறிப்பெழுதாது கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் தொடர்பில் பொருட் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் களஞ்சியப் பொறுப்பாதிகரிக்கு கையிருப்பு ஆவணத்தை தயாரிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | பொருட் பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் அழிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் கையிருப்பு ஆவணங்களிலும் | ஆய்வு அறிக்கையின் பிரகாரம் குறித்த நடவடிக்கை விரைவில் | வருடாந்த பொருட் பகுப்பாய்வு அறிக்கையின் படி ஏல விற்பனைக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் மதிப்பீட்டு பெறுமதிக்கு |

| | | |
|---|---|---|
| கணக்குகளிலுமிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட வேண்டும். | பெற்றுக் கொள்ள ஒருவரும் முன்வராததால் பொருட்கள் ஏலமிடப்பட்டவில்லை. |

### 3.5.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையினால் களஞ்சியசாலைப் பொறுப்பில் இருந்த புரொஜக்டர் இயந்திரம் காணாமல் போயிருந்ததோடு இது தொடர்பில் எதுவித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளிட மிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபைக்குச் சொந்தமான புரொஜக்டர் இயந்திரத்தை சமூக அபிவிருத்தி பகுதியூடாக வேலைத்திட்டமொன்றுக்கு கொண்டு சென்று அங்கு காணாமல் போயிருப்பதோடு அது தொடர்பில் குறித்த பகுதி பொறுப்பதிகாரியிடம் விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரியின் கவனயீனத்தால் அது நிகழ்ந்துள்ளதால் குறித்த இயந்திரத்தின் பெறுமதி மற்றும் அதற்குரிய 25மூ அரசாங்கக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சமூக அபிவிருத்திப் பிரிவின் உயரதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |

### 3.5.3 செயற்படாத மற்றும் குறை பாவனையுள்ள சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| உதவித் திட்டத்தினூடாக முன்னைய ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 225,000 பெறுமதியான குப்பைகளைத் துண்டாக்கும் இயந்திரம் மற்றும் மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 784,300 பெறுமதியான குப்பைகளைத் துண்டாக்கும் இயந்திரங்களுக்கு மூன்று அவத்தை மின்சாரம் வழங்கப்படாததால் பாவனைக்குட்படுத்த முடியாது உள்ளது. | விரைவில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உதவித் திட்டத்தினூடாக கிடைத்துள்ள துண்டாக்கும் இயந்திரத்தை இயக்குவதற்கு மூன்று அவத்தை மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் நிதி மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அதிக கவனம் செலுத்தி திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அதிகாரியாக கடமை குறித்தொகுதுக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு உள்ளகக் கணக்காய்வு விடயத்திற்கு மேலதிமாக மேலும் பல வருடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதால் நேரத்தை முகாமைப் படுத்துவதிலுள்ள அசௌகரியமே போதியளவான உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ள முடியாமைக்கான காரணத்தை தெளிவுபடுத்துகின்றேன். இந்தக்குறைபாட்டை நிவர்த்தி செய்ய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |